

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2024) பெசன்ட் நகர், மின் மயானத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். இந்த இறுதி அஞ்சலியில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கவிப்பேரரசு வைரமுத்து, துணை மேயர் மற்றும் வாரிய உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கவரைப்பேட்டை அருகே ரயில் விபத்து:

# பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உறுதுணையாக இருக்கும்!

## நள்ளிரவில் ஸ்டான்லி மருத்துவமனையில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, அக். 13 –**

**கவரைப்பேட்டை அருகே நடைபெற்ற ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நள்ளிரவில் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறியபின் பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.**



திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே மைசூரில் இருந்து பீகார் மாநிலம் தர்பாங்கா நோக்கி சென்ற பாக்மதி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் இரயிலும், சரக்கு இரயிலும் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் பயணிகள் இரயிலின் முதல் 7 பெட்டிகள் தரம் புரண்டன. இதில் ஒரு பெட்டியில் தீ விபத்தும் ஏற்பட்டது. விபத்து நடந்த இடத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் 3 தீயணைப்பு வாகனங்களும், 25 தீயணைப்பு வீரர்களும் பணியில் ஈடுபட்டுதீயை முற்றிலும் அணைத்தனர். இந்த விபத்தின் காரணமாக பயணிகள் இரயிலில் பயணம் செய்த 19 நபர்கள் காயமடைந்தனர்.

விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் பொன்னேரி அரசு மருத்துமனைக்கு அவசர ஊர்தி மூலம் கொண்டு செல்லப்பட்டனர். அதிக காயமடைந்த 3 நபர்கள் அவசர ஊர்தி மூலம் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் ராகுல் குமார் வயது (22), பிரியன்ஸ்சு குமார் வயது (20), சந்தன் குமார் வயது (25) ஆகிய 3 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக முதலமைச்சரின் உத்தரவின்பேரில் சம்மந்தப்பட்ட நிகழ்விடத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாட்டுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், கும்மிடிபூண்டி சட்ட மன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கூடுதல் காவல் துறை இயக்குனர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), ஆகியோர் சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் (11.10.2024) நள்ளிரவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும், நபர்களை நள்ளிரவில் நேரில் பார்வையிட்டு நலம் விசாரித்தார்.

பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே மைசூரில் இருந்து பீகார் மாநிலம் தர்பாங்கா நோக்கி சென்ற பாக்மதி எக்ஸ்பிரஸ் இரயிலும், சரக்கு இரயிலும் மோதிக் கொண்ட விபத்தையடுத்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் விபந்து நடத்த இடத்தில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் மீட்புப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

விபத்து நடந்த உடனே அந்த பகுதிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 22க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு உள்ளனர். ஸ்டான்லி மருத்து வமனையில் இதுவரை மொத்தம் 3 நபர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். மேலும் 2 பேர் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இதுவரை எந்த ஒரு உயிரிழப்பும் இல்லை. அனைவருக்கும் ஸ்டான்லி மருத்துவமனையில் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. விபத்து நடந்த இடத்தில் மாவட்ட நிர்வாகம், காவல்துறை, தீயணைப்புத்துறை, மருத்துவக்குழு ஆகிய துறையினர் முழுவீச்சில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மீட்புப் பணிகளை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். இந்த விபத்தால் பயணம் மேற்கொள்ள முடியாத இரயில் பயணிகள் தங்குவதற்காக விபத்து நடந்த இடத்திற்கு அருகிலேயே, 3 திருமண மண்டபங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் தமிழ்நாடு அரசு செய்து தரும் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, துணை முதலமைச்ச ரின் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை பெருநகர மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

பாக்மதி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் இரயில் பயணிகள் கவரைப்பேட்டையிலுள்ள TJS கல்யாண மண்டபம் (400), சாய் நிவாஸ் கல்யாண மண்டபம் (350), செல்லம்மாள் கல்யாண மண்டபம் (100) ஆகியவற்றில் 800க்கும் மேற்பட்ட பயணிகள் தங்க வைக்கப்பட்டு உடனடியாக குடிநீர் மற்றும் பிஸ்கட் வழங்கப்பட்டது. இரவு உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரவு உணவு அளிக்கப்பட்டு மேற்படி திருமண மண்டபங்களிலிருந்து பொன்னேரி இரயில் நிலையத்திற்கு 20க்கும் மேற்பட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பேருந்துகள் மூலம் அழைத்து செல்லப்பட்டு அங்கிருந்து சிறப்பு இரயில் மூலம் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர்.

---

### தொடர் ரயில் விபத்து:

# ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை!

## ராகுல்காந்தி விமர்சனம்!

*புதுடெல்லி, அக்.13-*

*ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், நாடு முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில் 200 பெரும் ரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளதும், இதில் 351 பேர் உயிரிழந்ததும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது.*

*சமூக ஆர்வலர் விவேக் பாண்டே தகவல் அறியும் சட்டம் மூலம் எழுப்பிய கேள்விக்கு, ரயில்வே துறை அளித்துள்ள பதிலில், நாடு முழுவதும் கடந்த 2019-20 முதல் 2023 -24 வரையிலான கடந்த 5 ஆண்டுகளில், 200 பெரும் ரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த விபத்துகளில் 351 பேர் உயிரிழந்தனர். 970 பேர் காயமடைந்துள்ளனர். இதில் அதிகபட்சமாக தென்கிழக்கு ரயில்வே மண்டலத்தில் ஏற்பட்ட 10 பெரும் விபத்துகளில் 297 பேர் உயிரிழந்தனர். 637 பேர் காயடைந்துள்ளனர். ரயில்வே துறையின் 17 மண்டலங்களில் இருந்து அளிக்கப்பட்டுள்ள பதில் மூலம் இது தெரியவந்துள்ளது.*



**ராகுல் காந்தி பேட்டி!**

*தொடர் ரயில் விபத்துகளில் உயிரிழப்புகள் பல ஏற்பட்டபோதும், ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.*

*ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மைசூருதர்பங்கா ரயில் விபத்து, பயணிகள் ரயில் நின்றுகொண்டிருந்த சரக்கு ரயிலுடன் மோதிய பாலசோர் விபத்தை நினைவு படுத்துவதாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார். தொடர் ரயில் விபத்துகளில் பல உயிர்கள் பலியாகியிருந்தாலும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை என்றும், இதற்கான பொறுப்பு உயர்மட்டத்தில் இருந்து தொடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒன்றிய அரசு விழித்துக்கொள்வதற்கு முன் இன்னும் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட வேண்டும் என்றும் ராகுல் காந்தி கேள்வி எழுப்பி உள்ளார்.*



கலைஞர் தொலைக்காட்சியின் தலைமை செய்தி ஆசிரியர் ப. திருமாவேலன் அவர்களின் தாயார் ப.முத்துலட்சுமி (வயது 82) 10102024 அன்று பாளையங் கோட்டை ராம்நகரில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார். அன்னாரது இல்லத்திற்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் நேரில் சென்று மறைந்த ப.முத்துலட்சுமி அவர்களின் திருஉருவப்படத் திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், ம.தி.மு.க.மின்னல் முகம்மது அலி ஆகியோர் உள்ளனர்.

---

# சிந்தனையாளர்களின் சரணாலயம்
# அண்ணன் முரசொலி செல்வம்



முரசொலி என்கின்ற ஒற்றை வார்த்தையை, ஏதோ ஒரு தனி மனிதனின் பெருமையையோ, ஒரு ஜாதியின் பெருமையையோ சுட்டும் பெயர் அல்ல.. மாறாக, ஒரு இனத்தின் பெருமையை, ஒரு மொழியின் சிறப்பை, ஒரு மண்ணின் கலாச்சாரத்தை, ஏறத்தாழ 80 ஆண்டுகள் பதிவு செய்து இந்த தமிழ் இனத்தின் போர்க்குணத்தை பறைசாற்றும் வரலாற்று ஆவணம்.

இந்த பெயரைத் தன் பெயருக்கு முன்னால் முன்னொட்டு பெயராக இட்டுக்கொண்ட இரு பெரும் ஆளுமைகள் மறைந்த அண்ணன்கள் முரசொலி செல்வம் மற்றும் முரசொலி மாறன் ஆகிய இருவர். பலபேர் முரசொலியை தன் பெயரோடு சேர்த்துக் கொண்டார்கள். அது அவர்களுக்கு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள உதவியிருக்கலாம். ஆனால் அண்ணன்களுக்கு அப்படி இல்லை. இவர்களால் முரசொலி அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. எப்படி என்றால், கடந்த 2001 இல், நவம்பர் மாதம் 9 முதல் 13ஆம் தேதி வரை கத்தார் நாட்டில் தோகா நகரில் உலக வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு, அன்றைய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறன் முன்மொழிந்த இரண்டு தீர்மானங்கள், அந்த மாநாட்டில் கலந்து கொண்ட 142 நாடுகள் மட்டுமல்ல, உலக நாடுகளே உயர்வாக கருதிய அந்த தருணத்தில் முரசொலி என்பது சிந்தனையாளர்களின் உறைவிடம் என்பதை உலகுக்கு உணர்த்தியது.

உலகம் போற்றும் உன்னதமான தீர்மானங்களை தந்த ஆகச்சிறந்த சிந்தனையாளர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகைதான் முரசொலி என்று குதூகலித்தது ... அதே போன்று தமிழக அரசியல் வரலாற்றில் 21/9/1992 என்ற நாளை எவரும் எளிதில் கடந்து விட முடியாது. தமிழக சட்டமன்றத்தில் அது வரைக்கும், நடந்திராத இனிமேலும் நடந்தேற முடியாத கொடுமை ஒன்று நடந்தது. ஆம் ஜெயலலிதா ஆட்சியில் அன்றைய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்... மறைந்த பருதி இளம்வழுதி வீட்டு வசதி வாரியத்தின் முறைகேடு குறித்து 9/9/1992 காலை நடந்த விவாதத்தில் பேசிய கருத்துக்களை முரசொலி பதிவு செய்து, மதியம் 2:30 மணிக்கு முன்னால் வெளியூர் பத்திரிகைகளில் அனுப்பிவிட்டது. அன்று மாலை, சபாநாயகர் அவைக் குறிப்பில் இருந்து அதை அகற்றி விட்டார். எனவே, அன்றைய முரசொலி ஆசிரியர் அண்ணன் முரசொலி செல்வத்தின் மீது உரிமை மீறல் பிரச்சினை கொணர்ந்து, சட்டமன்ற உரிமைக்குழு அவருக்கு அழைப்பாணை அனுப்பியது. நேரில் சந்தித்து விவரம் கொடுத்தார். முரசொலி மட்டுமல்ல, அன்று மாலை வந்திருந்த பல பத்திரிகைகளிலும் வந்திருந்ததை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டினார்.



**பேராசிரியர்**
**கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
*கழக செய்தித் தொடர்புச் செயலாளர்*

முரசொலியின் அன்றைய மாலைப் பதிப்பில் அது இல்லை என்பதையும் எடுத்துச் சொன்னார். தண்டிக்க வேண்டும் என்ற முடிவில் இருந்த ஜெயலலிதா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பிறகு மன்னிப்பு கேட்டால் விட்டுவிடுவதாகவும், இல்லை எனில், 21.9.1992 சட்டமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றனர். மன்னிப்பு கேட்கும் பரம்பரையில் வந்தவனல்ல நான். எனவே நடப்பது நடக்கட்டும் என்றார் அண்ணன். தலைவர் கலைஞரிடம் ஆலோசித்தார். கருப்பு சட்டை அணிந்து சட்டமன்றம் போக சொன்னார் தலைவர். கருப்பு பேன்ட், சட்டை அணிந்து சட்டமன்றம் சென்று அங்கு தயார் செய்து வைத்திருந்த கூண்டில் ஏறினார். மன்னிப்பு கேட்க சொன்னார் சபாநாயகர் முடியாது என்றார் அண்ணன் முரசொலி செல்வம், நீங்கள் போகலாம் என்றார். அதிகாரத்திற்கு அடிபணியாத கொள்கை தீரர்களின் கூடம் முரசொலி என்பது நிரூபிக்கப்பட்டது. இப்பொழுதும் இப்பேர்ப்பட்ட ஒரு சிந்தனையாளரை, கொள்கை தீரரை ஆசிரியராக கொண்டு இருப்பதுதான் முரசொலி...என்று தனக்கு வலிமை சேர்த்துக் கொள்கிறது முரசொலி.

நான் முரசொலி மாறன் அண்ணனோடு பேசிப் பழகியதில்லை (மூத்த தலைவர்கள் அவரைப்பற்றி சொல்லும் போது அறிவாளிகளை அடையாளம் கண்டு தட்டிக் கொடுத்து வளர்ப்பதில் அவருக்கு நிகர் அவர்தான் என்று கூறியுள்ளனர் ). ஆனால், கடந்த எட்டு ஆண்டுகளாக அண்ணன் முரசொலி செல்வம் அவர்களுடன் நேரிலும் அலைபேசியிலும் அடிக்கடி பேசிக் கொள்வதுண்டு. நமது கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளும் விவாதங்கள் குறித்தும், நேர்காணல் குறித்தும், விவாதித்திருக்கிறார். கருத்துரைகள் வழங்கி இருக்கிறார். சில நேரங்களில், எங்களுக்குள்ளேயே விவாதங்கள் நடந்ததுமுண்டு. குறிப்பாக, நமது கழக தலைவர் அவர்கள், 'THE RISING SUN' ஆசிரியர் பொறுப்பைத் தந்தவுடன் முரசொலி செல்வம் அண்ணாவை கோபாலபுரம் இல்லத்தில் தனியாக சந்தித்து அறிவுரைகள் கேட்டேன். பத்திரிகைத் தர்மத்தையும், அதன் நெறிமுறைகளையும் சொல்லித் தந்தார். ரத்தின சுருக்கமாக அவர் சொன்னது: உறுதிப்படுத்தி ஊர்ஜிதம் ஆகாத எந்த செய்தியையும் வெளியிடாதீர்கள். நீதிமன்றத்தில் சந்தேகத்தை குற்றவாளிக்கு சாதகமாக பயன்படுத்துவது போல் நமக்கு ஒரு நிகழ்வு நூறு சதவிகிதம் சந்தேகமின்றி இருந்தால் அன்றி அந்த நிகழ்வு நடக்கவில்லை என்றுதான் கருதவேண்டும்... என்ற உன்னதமான நெறிமுறையை உணர்த்தியவர் அண்ணன்தான். உள்ள படியே ஒரு குருவின் இடத்தில் இருந்து வழி நடத்தியவர்.

சிலந்தி என்ற பெயரில் அவர் எழுதியவற்றில் சில நேரங்களில் தந்தை பெரியாரின் உக்கிரம் தெரியும்.. பல நேரங்களில் பேரறிஞர் அண்ணாவின் அறிவுக் கூர்மை மிளிரும்.. நிறைய நேரங்களில் தலைவர் கலைஞரின் எதுகை மோனையுடன் கூடிய எள்ளல் துள்ளி விளையாடும் பொதுவாக அவருக்கே உரிய நகைச்சுவை நடனமாடும்... முரசொலியில் அவர் தந்த வரலாற்று சான்றுகள் ஆரிய கூத்தாடிகள் சொல்லும் பொய்களுக்கு தக்க தரவுகளைத் தந்து உடனடிப் பதிலுரைகள் என்று சனாதன எதிர்ப்பு வாள் சுழற்றிய உக்கிர பொழுதுகளில் அவரோடு ஆவலாக உரையாடியுள்ளேன். திராவிட தத்துவார்த்த விவாதத்தினூடே அந்த கருத்து குறித்து அவரோடு அளவளாவிய நபர்களையும் அவரவர் பார்வைகளையும் பகிர்ந்து கொண்டார். அப்படி அவர் சொன்ன பேர்கள் பெரும்பாலும் திராவிட சித்தாந்தத்தில் நேற்றைய, இன்றைய, நாளைய சிந்தனையாளர்கள்தான் இருந்தார்கள். அப்போது தான் புரிந்தது அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள், சமகால சிந்தனையாளர்களின் சரணாலயம் என்று, இனி இவர் போல் கிடைக்குமா?, ஆட்சி அதிகாரத்தில், கட்சி நிர்வாகத்தில் தான் என்ன நினைத்தாலும் எப்படி வேண்டுமானாலும் செய்ய முடியும் என்ற நிலையிலும் எந்த அதிகார தொனியும், இல்லாத எளிமையான மனிதராய், எல்லோரையும் அரவணைக்கக் கூடிய தாயுள்ளம் கொண்ட, தமையனாய், தந்தை பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், முத்தமிழறிஞர் கலைஞரிடம் பாடம் படித்து, அனுபவத்தால் தான் பெற்ற உலக ஞானத்தையும், ஒன்றிணைத்து தலைக்கணமே இல்லாமல், என் போன்ற பிள்ளைகளுக்கு ஞான குருவாக அண்ணன் முரசொலி செல்வத்தை போல் இனி ஒருவர் இந்த மண்ணில் கிடையாது அவரைப் போல் ஒருவரை படைத்திட இயற்கையே நினைத்தாலும் உறுதியாக அதுவும் தோற்றுத்தான் போகும்....

பின்புலம் இல்லாத ஓவியம் போல் தனித்து நிற்கும் தவிப்புதான் மேலோங்கி நிற்கிறது...

ஏன் அண்ணா இப்படி செய்தாய்.....